**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்.</u>**
**முன்னிலை: திரு. சா. வரதராஜன், பி.ஏ.,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.**
**2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 11 ம் நாள் வியாழக்கிழமை**
**<u>Crl.M.P.No.528 of 2026 in 513 of 2026</u>**

திரு.கந்தவேல் (வயது 53/2026),
த/பெ.தங்கவேல்,
2/388, நாடார் தெற்குத் தெரு,
படந்தால்,
சாத்தூர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம். ...மனுதாரர்/வாகன உரிமையாளர்

/ இடையே/

அரசுக்காக
காவல் ஆய்வாளர் ,
சாத்தூர் தாலுகா காவல் நிலையம்,
விருதுநகர் மாவட்டம்.
குற்ற எண்.152/2026 ... புகார்தாரர் /குற்றமுறையீட்டாளர்

மனுதாரர் வழக்கறிஞர் : திரு.M.குருசாமி, B.Sc., B.L.,
அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–2

**<u>உத்தரவு</u>**

1. சாத்தூர் தாலுகா காவல் நிலைய குற்ற எண்.152/2026 சட்டப்பிரிவுகள் 4(1)(A) r/w 4(1)(i) of the TNP Act, and 4(1)(C) r/w 4(1)(a) of the TNP Act இன் படி என்ற வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள TN 96 1968 ASHOK LEYLAND என்ற லாரியை சமூக நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் மற்றும் மேற்படி சொத்தினை தன் வசம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டி BNSS பிரிவுகள் 497/503–ன் கீழ் மனுதாரர்/எதிரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி வாகனம் காவல் நிலையம் வசம் இருக்கும் பட்சத்தில், வாகனத்தின் இன்ஜின் மற்றும் இயந்திரப் பொருட்கள் ஓடும் நிலையில் இல்லாது சேதமடைந்து இயங்காமல் போய்விடும் என்றும், அவ்வாறு வாகனம் மனுதாரர் வசம் ஒப்படைக்காமல் இருந்தால் மனுதாரருக்கு பெருத்த பண செலவு மற்றும் பொருள் செலவு ஏற்படக்கூடும் அதனால் தன்னிடம் திருப்பி வழங்கும் பட்சத்தில் நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவிற்கு கட்டுபடுவதாகவும், வாகனத்தை இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கும் பட்சத்தில் நல்லமுறையில் பாதுகாப்பார் என்றும், வானத்தை விற்கவோ, அடமானம் செய்யவோ, உருமாற்றம் செய்யவோ மாட்டார் என்றும், எவ்வித குற்றச்செயலிலும் ஈடுபடுத்தமாட்டார் என்றும், நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் ஆஜர்படுத்துவதாகவும் கூறி, அதை இடைக்கால பராமரிப்புக்காக மனுதாரரிடம் ஒப்படைக்க மனுதாரர் தரப்பில் கேட்கப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனம் அத்தாட்சியின் பேரில் பரிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டி காவல் துனைக் கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு, விருதுநகர் மாவட்டம் அவர்களிடம் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றும், இவ்வாகனத்தை மனுதுாரர் வசம் ஒப்படைக்கும் பட்சத்தில் அதை விற்பனை செய்யகூடும் என்றும், நீதிமன்ற விசாரணைக்கு அழைக்கும் போது வாகனத்தை ஆஜர்படுத்தமாட்டார் என்றும், வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க கடும் ஆட்சேபனை செய்யப்பட்டது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.06.11 17:27:14 +0530

4. இந்த நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும், வழக்கு ஆவணங்களையும் நன்கு பரிசீலனை செய்தது.

5. சாத்தூர் தாலுகா காவல் நிலைய குற்ற எண்.152/2026 சட்டப்பிரிவுகள் 4(1)(A) r/w 4(1)(i) of the TNP Act, and 4(1)(C) r/w 4(1)(a) of the TNP Act இன் படி என்ற வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள TN 96 1968 ASHOK LEYLAND என்ற லாரியானது மனுதாரருக்கு சொந்தமானது என்பது மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரம், வாகனத்தின் பதிவுச்சான்று மற்றும் வழக்கு ஆவணங்களில் இருந்து தெரியவருகிறது. மனுதாரரின் உதவியோடு தான் அவருடைய வாகனத்தில் எதிரி மது கடத்தி கொண்டுவந்தார் என்பது இன்று வரை அரசு தரப்பு வழக்கு அல்ல. மனுதாரர் இந்த வழக்கில் எதிரியாகவும் சேர்க்கப்படவில்லை. எனவே, மனுதாரர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் Denash vs The state of Tamil Nadu (2025 INSC 1258) மற்றும் Bishwajit Dey vs The State of Assam (2025 INSC 32)ன் முன் தீர்ப்புகளின் படி இந்த வழக்கில் உள்ள மனுதாரரின் வாகனத்தை அவர் இடைக்கால பராமரிப்புக்காக பெற்றுக்கொள்ள தகுதி உள்ளது.

6. மேலும், Sundara Bai Ambalal Desai –Vs– State of Gujarat 2003 SCC Crl. 1943 என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின் படியும், மேற்படி வழக்கு சொத்தை மனுதாரர் வசம் திருப்பிக் கொடுக்கும் பட்சத்தில் மனுதாரர் தக்க பிணையதாரர்களை ஆஜர்படுத்த தயாராக இருப்பதாக கூறியதைக் கருத்தில் கொண்டும், பயன்படுத்தாமல் இருந்தால் ASHOK LEYLAND லாரியானது பயனற்றுபோய்விடும் என்பதாலும், மனுதாரருக்கு தக்க நிபந்தனையின் பேரில் வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள லாரியை இடைக்காலமாக திருப்பிக் கொடுப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதால், மேற்சொன்ன வழக்கு சொத்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக திருப்பிக் கொடுக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>:–

1. மனுதாரர்/உரிமையாளர் ரூபாய்.2,00,000/–க்கு இரண்டு பிணையதாரர்களுடன் பிணைமுறி எழுதிக் கொடுக்க வேண்டும்.
2. மனுதாரர்/உரிமையாளர், வாகனத்தை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ, அடமானம் வைக்கவோ கூடாது.
3. இந்நீதிமன்ற தலைமை எழுத்தர் முன்னிலையில் வழக்கு சொத்தை புகைப்படம் எடுத்து அதற்கு சாட்சிய சட்டம் படி சான்று மற்றும் பஞ்சநாமா தயார் செய்து அவற்றை வழக்கு கோப்பில் இணைக்க வேண்டும்.
4. வழக்கு விசாரணையின் போது மனுதாரர் வழக்கிடை சொத்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.
5. வழக்கு விசாரணையின் போது வாகனத்தின் உரிமை மற்றும் எதிரியினுடனான தொடர்பை ஆட்சேபனை செய்யமாட்டார் என்று தனியாக பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும்.

இந்த உத்தரவு, என்னால் இன்று 11.06.2026 ஆம் தேதி திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.06.11 17:27:19 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
சாத்தூர்